முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1104

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.10.2022, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா வாழ்க
ஓங்கார சக்திமிகு தேசிகா வாழ்க
ஓங்காரக்குடில் படைத்து அருளுகின்ற
ஓங்கார ஞானியே குரு அரங்கனே வாழ்க வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமண்யர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 20 ம் நாள் 07.10.2022 வெள்ளிக்கிழமை)
தாழ்விலா அரங்கன் ஓங்காரக்குடிலே
தரணியை காக்க வல்ல ஞான சபையாகும்
3. சபைதனில் உலகோர் சரணாகதி கொண்டு
சற்குருவே ஆறுமுக அரங்கா என
அபயமென வணங்கி அரங்கன் திருவடியை
அறிவிப்பேன் இறுகப்பற்றி இணைந்து அகலா வண்ணம்
4. வண்ணமுடன் தொடர் சேவையாற்றி
வணங்கி வையகத்தில் தர்மத்தை
தர்மத்தை இயன்ற வண்ணம் செய்துகொண்டு தாமுரைப்பேன் தொடர்பூஜை செய்துவந்தால்
கர்மத்தை நீக்கி இந்த உலகில் இனிதே கலியுகத்தில் ஞானிகளாக உலகோர் மாற்றம் பெறுவர்
5. மாற்றத்தை இலகுவாக உருவாக்கி
மக்களைக் காக்கும் மகா சக்தியாக
ஆற்றல்பட அரங்கன் இயங்கி வர
ஆறுமுகன் யான் அரங்கனுள் இருந்து அற்புதம் நிகழ்த்துகின்றேன்
6. ஆகவே உலகோர் அரங்கன் குடில் நோக்கி வர
ஆனந்தமான ஞான ஆட்சி
தரவல்ல வகையான உலகத்தை
வல்லமை மிக்க ஞானத் தலைமையை
7. தலைமைதனை படைத்து உலகோர்
தரணியை காத்து மகிழ்வர்
இணையில்லா ஞானிகள் ஆட்சியில்
ஏற்றம் தரவல்ல ஞான ஆட்சியுமாக கண்டு மகிழ்வர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–